கேரளாவிலே ஒரு கிலோ மீட்டருக்கு ஒன்று வைக்கிறார்களே, நாம் ஏன் வைக்கக்கூடாது, சின்னமுட்டத்திலேயிருந்து கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் இருக்கிறது. எனவே, மத்திய அரசுக்கு இனிமேலாவது நம்முடைய அரசு புரப்போசல் கொடுப்பதற்கு முன்வருமா? அப்படி அனுப்பினால் உலக வங்கி மூலமாகவோ மத்திய அரசு மூலமாகவோ பணத்தை வாங்கித் தருவதற்கு முடியும். ஆகையால் புரப்போசல் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசு கொடுப்பதாக அவர் ஒரு தகவலை சொல்லியிருக்கிறார். 1986 ஆம் ஆண்டிலே மத்திய அரசு ஆய்வு செய்கிறபோது, இந்த இடத்திலே அந்தச் சாத்தியக்கூறு இல்லையென்றே ஒரு அறிவிப்பை செய்திருக்கின்றது. ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தொடர்ந்து கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே நம்முடைய மீனளத் துறையினுடைய கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் Central Institute of Coastal Engineering என்று பெங்களூரில் இருக்கின்ற அந்த மத்திய மீன்வளத் துறைமுக அதிகாரி அவர்களை அணுகி இதுகுறித்து பேசி அமைக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே குளச்சலிலே 40 கோடி ரூபாய்க்கு ஒரு கருத்துரு நம்முடைய புரட்சித் தலைவி அரசின் மூலம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இன்னும் அங்கிருந்து ஒப்புதல் கிடைக்கப்பெறாது இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். *(குறுக்கீடு)*

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1986-லேயே கொடுத்து, இதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்று அமைச்சர் சொல்கிறாரே, உங்கள் முல்லப்பள்ளியிடம் சொல்லுங்கள். புரப்போசலே வரவில்லை என்று உங்கள் நண்பர் சொன்னார் என்று நீங்கள் சொன்னீர்களே, இந்தத் திட்டத்திற்கு புரப்போசல் கொடுத்து (குறுக்கீடு) சாத்தியக்கூறு இல்லை என்று 1986-லே சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது திரும்பவும் முயற்சி பண்ணுகிறோம் என்றுதானே சொல்கிறார். நாங்கள் விடவில்லை என்கிறார் அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 10]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 98, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**98—**

### தேனீ வளர்ப்பு-பெருக்க மையத்திற்கு நிதி உதவி

**38167—திரு. கா. பூ. முனுசாமி:*

*மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேனீ வளர்ப்பு-பெருக்க மையத்தின் ஆக்கப்பூர்வமான உதவியை அரசு மேற்கொண்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நிதி உதவி ஆராய்ச்சி வளர்ச்சி பற்றிய விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேனீ வளர்ப்புக்கு அரசு ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலமாக நிதியுதவி செய்து வருகிறது.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மாநில அரசினுடைய பங்கு எவ்வளவு என்பதையும், அதே நேரத்தில் மலைவாழ் மக்கள் நலம் பெறுகின்ற வகையிலே இந்தத் திட்டம் இருக்கின்ற காரணத்தினால், மைய அரசினுடைய பங்கு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் கதர் ஆணைக் குழு முழுமையாக இந்தத் திட்டத்திற்கு நிதியுதவி செய்கிறது. இருந்தாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மாநில அரசினுடைய பங்கு மிக அதிக அளவில் இதிலே செய்யப்பட்டு இந்தத் திட்டம் மிகச் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.